394

உ

நற்குலசேகரி என்னும்

நல்லதங்காள் சரிதை.

(இரண்டாம் பாகம்.)

16 OCT 1924

இ. வே. துரைசாமி முதலியா

பெரியநாயகியம்மன் பிரஸில்

1924.

0-,892 msm,N
18079

ஓம் சற்குருவே நம:

நல்லதங்காள் என்னும்

இயற்பெயருடைய

நற்குலசேகரி சரிதை.

(இரண்டாம்பாகம்.)

இஃது

ஆலந்தூர் ஹிந்து பால விவேகதாயினி சபையின்

டாக்கியவயார் ம-ா-ா-ஸ்ரீ பண்டித பிக்ரகனி,

தி. சுப்பராயமுதலியாரவர்களால்

இயற்றியதை,

ஆலந்தூர் ஒரிஜனல் டிராமாடிக் கம்பெனியை

மானேஜ்மெண்டு செய்துவந்த ம-ா-ா-ஸ்ரீ அயன் ராஜபார்ட்

தி. முருகேச நாயகரவர்கள்

அயன் ஸ்திரீபார்ட்

மனமோகன அரங்கசாமி நாயுடவர்கள்

பாடி வருவதுடன்

ஷை கம்பெனியில் சமஸ்தபார்ட் தரிக்கும்

மனமோகன ரஞ்சிதமென்னும்

எம். ஆர். எஸ். ஸ்ரீநிவாச ஐயரவர்களால்

அநேக நூதனகாயன வசனங்களும் சேர்த்து

சி. வே. துரைசாமி முதலியார்

அவர்களது

சென்னை குளே

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1924. [அணா 4.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

16 OCT 1924

5½ - முழ நீகளம் 2½ - முழ அகலமுள்ள

அசல் ஜப்பான் பட்டு குட்டைகள்

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுகுட்டை வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள் செலவழிந்து விட்டபின் 10-ருபாய் கொடுத்தாலும் இப்படிப் பட்டகுட்டை கிடைப்பது அரிது.

மிகவும் நேர்த்தியான பளபளப் போகும் கூடிய பட்டினல் செய்யப் பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக கொள்ளவும், துப்பட்டாக்களாகவும், ஸ்ரீகள் மேலாக்காகவும், சிறுபெண்கள் தாவணியாகவும் உபயோகிக்கலாம்.

இதில் பச்சை, வெள்ளை, சிகப்பு, வெண்சிகப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ண முதலிய பலரகங்கள் உண்டு

குறைந்த விலை குட்டை 1-க்கு ரூ. 3½

சர்வதேள் விஷ நிவாரண சஞ்சிவி.

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய முதன்மையான ஒளஷதம். தேள், நட்டுவாக்கனி, செய்யான், பாம்பு, எலி முதலியவிஷங்கள் இரண்டு நிமிஷத்தில் பறக்கும். இது அநுபோகமுள்ள கைகண்ட மருந்து.

இரண்டு மருந்து பாக் 1-க்கு அணா 8.

"இராஜேஸ்வரி" கூந்தல் வளரும் தைலம்

இத்தைலம் சிறந்த வனமூலிகைகளினல் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது. சிறந்த வாசனையும், கூந்தலை நீளமாக வளரச் செய்யும் அபாரசக்தியும் இதற்குண்டு. சகல சிதரோகங்களையும், கண்களில் நீர்வடிசல், மயக்கம், கண்ணெரிச்சல்முதலிய வியாதிகளையும் அடியோடு நீக்குவதன்றி சரீரத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

டின் 1-க்கு விலை ரூபா 1 0 0

நரைமயிர் கருக்குந்தைலம்



இத்தைலம் இதற்கென்று அநேகரால் விற்கப்பட்டு வரும்பலவித கப்புகளைப்போன்றதல்ல. மயிரைச் செம்பட்டையாகவும், கம்பல் நிறமாகவும் மாற்றி விகாரப் படுத்தும் குணம் இத்தைலத்தில் கிடையாது. நரைத்த மயிருக்கு இத்தைலத்தைப் பூசிய 5-நிமிஷங்களுக் கெல்லாம் கருமைநிறத்தையும் பளபளப்பையும் உண்டாக்கும். வயோதிகரை வாலிபரைப்போல் தோற்று விக்கும். உபயோகிக்கும் விதம் பார்சலும் அனுப்பப்படும்.

பாக்கெட் 1-க்கு ரூபா 1 0 0

ரூபாவதி அலலது சிதம்பர சாமியார் :— இஃது ஓர் இனிய செந்தமிழ் நாவல் படிப்போரின் மனக் கவலையும் கஷ்டமும பறந்தோடச் செய்யும். விலை அணா 0 12 0

உ

ஸ்ரீவாலைபரமேஸ்வரி துணை.

நல்லதங்காளென்னும்

இயற்பெயருடைய

நற்குலசேகரி சரிதை.

இரண்டாம் பாகம்.

கணேசர் துதி.

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் ஆதி.

(சாமராஜபூபனே நமோ நமோ) என்ற வர்ணமெட்டு.

ஸ்ரீ கணேச தேவனே நமோ நமோ
சிறுவனுனது திருவடிப்பணிந் திருகரங்குவித்தேன்
தேவா வா வா திருவருள் புரிகுவாய் ஸ்ரீகணேச

891.812
3102
181029

உலகிலுன்போல் தெர்வம்வேறில்லை இல்லை
உமையவள்மகிழ்குமரனே இதுசமயம் என்னைக்கார்
யோகா தியாகா உலகவைபோகா ஸ்ரீகணேச

தாசனின் றியற்றும் செந்தமிழினில்
தழைசீரடியிம் பிழையணுகாதென் னுறைதலையையபுரிந்துன்
தாளை ஏழைதனக்கருள்செய் யிவ்வேளை ஸ்ரீகணேச

மூவர்கட்கும் ஆதிமூலாதரனே அன்று
மோசனைவென்ற பாசனே ஸ்ரீநிவாசனைக்கண்பார்
மோனா கியானா ஞானா மறைமுடிவுறு ஸ்ரீகணேச

சரஸ்வதி துதி.

ஆயாங்கரோஜீ தாதுமெரி என்ற வர்ணமெட்டு.

வேதருபபாணகுல வாணிவந்தனம்
போதமலர் மீகருமம் பூவைகார்தினம் (வேத)

நாரதாதிமுனிவர்போற்றும் நாராயணியே
காராயெந்த நாளுமமிர்த வதனகேணியே (வேத)

ஆலந்தூர் ஒரிஜனல்சபைக் கருள்யுரிதேடி
மேலாய்புவி மீதுதழைத் தோங்கிடதாடி (வேத)

பாலன்முருகேசன்சகா பணியும்தற்பரி
சீலன்சுப்பராயல்தொழு தேற்றும்சிற்பரி (வேத)

எ. பாலாமணி—குலசேகரி தரு.

பார்ஸீ கீதம்.

காவுஞ ச்சும் குஷி ருஷிகளும்
ஹில மிலக் கரும்
சகி ரங்க ரலியாம்

குலசன பிச கில கலியாம்
சோபமில காரங்க ரலியாம்

டுமக்க டுமக்க டோலு பஜே
சுன ன ண ன ன நாரி

குங்குரு ஹிலாம் காஜிசுகபாம்
சோப குரீஜாம் வாரி வாரி ஜாம்

உஸ-க்கு பியாரே நாச்சசோ பசாரி
சோபமஜலிசே குஷீரஹோ பியாரி

ரதா ரஹோ சலா மதே
ஜிஹா னமே தெமா னமே

ல்தக்கோ வஹலி நாச்சுங்கி
ஹாய் ஹாய் ஹாய்
சாலியாம் ப ஜாவுங்கி
வவ வ
வைஹஸீமேரி ஜாவுங்கி
ச்சும் ச்சும் ச்சும்

இராகம் முகாரி கல்பண தாளம் ஆதி.

வருவீர் அப்பாமக்களா வரிசையுடனென்பின்னே (வரு)

வருவீர்வருவீர்மன வாட்டங்கொள்ளாமல் நீங்கள்
அருகிலுள்ள சுற்றத்தார் அரண்மனைக்குச்செல்ல (வரு)

அண்ணன்விடென்றல்லவோ ஆசையுடன்வந்தேன்
ஆசைநிராசையாய் ஆனதென்செய்குவேன்
உண்ணீர்உண்ணீரென்று உபசரியார்வீட்டில்
உண்ணுமைகோடிபெறும்உண்மையைஔவைசொல்ல (வரு)

வசனம்.

அண்ணன்வீடு என நம்பி ஆசையாகவந்த என்மனதில் எண்ணம் நிராசையாய்விட்டது இனி நம்மை யிங்கு உபசரிப்பவரும் எவரும் கிடையாது ஆதலால் யான் இனி இங்கிருப்பதைவிட எங்கேயாவது சென்றுவிடுதலே நலம்.

தெருவு சீன்.

குலசேகரி தரு நின்னுபாகி என்ற வர்னமெட்டு.

இப்படிவருமென்று எண்ணமற்போனேனே
ஈசாநின்செயல்தானோ காணேனே
அப்போதேஎன்கணவர் அறிவித்தசகுனிபோல்
சொற்படிமுடிந்ததே சோருமக்கள்முகம்(இப்)

தங்கவிடமுமில்லை தயவாயழைப்போரில்லை
தாயில்லை தந்தையில்லை தடுத்தேனென்பதிசொல்லை
நங்கையாள் வருந்துகின்றேன் நல்லண்ணனுமில்லை
எங்கேனும்பாழ்கிணற்றில் இரங்கிமாள்வதேநன்மை(இப்)

வசனம்.

ஆ! ஜெகதீசா எமக்கு இக்கெதிவருமென எள்ளினளவுமெண்ணியதில்லையே என்பர்த்தா சொல்லுதடுத்து வந்ததினால் தங்கயிடமுமில்லை. தாய் தந்தையருமில்லை தயவாய் அழைத்து ஆதரிப்பவருமின்று யான் இத்துயரடைவதோடு எங்கேனும்பாழ்கிணற்றிலாவது எம்உயிரைப்போக்கிக்கொள்வதே நலமெனயோசிக்கின்றேன்.

பொது வசனம்.

குலசேகரி மைந்தருடன் இவ்விதம் சோதிக்கும்போது சமீப விடுகளிலுள்ள பெண்களி குலசேகரியைக்கண்டு சொல்லுதல்.

அயல்வீட்டுப் பெண்கள் தரு.

இராகம் பார்சி தாளம் ஆதி.

சும் சும் சும் பியாரி குல்சனக மோரிப்யாரி
நலயில மிலயில ஹ ஹ ஹ
ஆதஷான் நாரதப்யாரி
ரங்கவுடே சது ராகசமரி
ஆதுஷான் பேதுஷான்
தில்குஷான் தில்முஷான்
ஆதுஷான் பேதுஷானரே சும்

அயல்வீட்டுப்பெண்கள் தரு இராகம் தன்யாசி திரிபுடைதாளம்.

கண்மணியே நல்லதங்கா கவலைநீகொள்ளவேண்டாம் க

பெண்மணியே நீதானின்ற பிள்ளைகளுடனேயின்று
பெருந்துயர்கொண்டுசெல்லலாமாபிரீதியா யெங்கள்சொற்கேட்பாய்

எங்கள் அரண்மனைக்குவருவாய் நாங்கள்
இனிதாய்கொடுப்பதை பெருவாய்
நங்கையேயுன் அண்ணன் வந்தால்நடந்தசேதியை
நவிலுவோம் இதைவிட்டு செல்லாதே கண்

பொது வசனம்.

அம்மணி நீ எங்கேயும் செல்லவேண்டாம் இங்ஙனமே தங்குவாய் உனக்கு பால் பச்சரிசி சக்கரை முதலியதுங் கொடுக்கின்றோம்நீ அதை வாங்கிக்கொண்டு இங்கிருக்கில் யாங்கள் உன் தமயனிடம் இங்கு நடந்த செயல்களை உரைக்கின்றோம் நீசோகமடையாதே அம்மா.

குலசேகரி தரு நடந்ததென்று லென்ற வர்ணமெட்டு.

என்னையேன் வருந்துகிறீர் அம்மா
வந்திழையாரே சும்மா
என்னிடதமயன் யிங்ஙனம்வந்தால்
இயப்புவீர் நிகழ்ந்ததிச்செயலை

அன்பானஞ்செய்யோம் அன்னியர்வீட்டினில்
அழைப்பதுவீணேயாகும் என்

கள்ளமில்லாமலே கருணைவைத்தெம்மை
கனிவாயழுகின்ற மாந்தர்களே
உள்ளத்தின்சாக்ஷியாய் ஒருவரில்லத்திலும்
உண்ணுமேநீங்களிங்கே என்

குலசேகரி வசனம்.

அம்மணி என்னேதாம் ஏன் இவ்வளவு வருத்துகின்றீர் யான் இங்கு தங்கமுடியாது தாம்மாத்திரம் இங்குநடந்த தீச்செயல்களை எந்தன் தமயனுரிடம் புகல்வீர்கள் யாங்கள் அன்னியருடைய வீட்டில் புசிக்கமாட்டோம் —கையால் நாம் கருணையுகின் யானதெரிவித்தவாறுபோல நடத்தவேண்டுமம்மா யாங்கள் சென்றுவருகின்றேம்.

அயல்வீட்டுப்பெண் வசனம்.

அம்மா ஆனுல் உனதிஷ்டம்போல் செய் அம்மா எம்முடைய வார்த்தையை தள்ளாதே.

அடவி சீன்.

குலசேகரி தரு இராகம் காம்போதி தாளம் ஆதி.

என்ன ஆ ஆ ஆ காலமோ எனக்கும் என் மக்களுக்கும்
ஈசன்செய்த கோலமோ (என்ன)

மன்னவன்வரக்கைமீறி மாபாவியிங்குவந்தேன்
இன்னும்நானங்குசென்றல் பேசுவார் ஏசுவார் (என்ன)

அண்ணன்றிவ்வழிவந்தால் அறிந்துகொள்ளுவதற்கு
ஆவாரந்தழையொடித்து அடையாளம்நான்போடுவேன்
எண்ணுதெல்லாமெணணி ஏங்கியழுதாலென்ன
கண்ணை துடைப்பாரில்லை கடவுள்செயலோயிதென்ன (என்ன)

பால்சோறுகொடுத்துமிக்க பரிவாய்வளர்த்தமக்கள்
கால்சோர்ந்துநடப்பது கண்டால்வயர்பற்றுதே
தோள்மேல்யெனத்தகும் துரையவர்காண்பாராகில்
நூல்கயற்றாலல்லவோ நொடியில்தூக்கிடுவார் (என்ன)

வசனம்.

குழந்தைகளே வருவீர் செல்வோம்
(குழந்தைகள் வசனம்.) அம்மணி.

குலசேகரிக்கும் குழந்தைகளுக்கும் சம்வாதம்.

குழந்தைகள் தரு.

அம்மம்மா பசிதாளோம் ஐயோயிதற்கென்செய்வோம்
அவனியிலெப்படியுய்வோம் தாயே

குலசேகரி தர்க்கம்.

பசிதீரபழவர்க்கம் பறித்து நான்கொடுக்கின்றேன்
புசித்திளைப்பாறுவீர் புதல்வர்களே

குழந்தைகள் தர்க்கம்.

கடிகினில் அங்குதோன்றும் சாரைப்பழங்கொய்து
அட்டியில்லாமல் தாரும்தாயே

குலசேகரி தரு.

சாரைப்பழந்தின்ன கைநிரம்பகொய்து
தாரேனடாயெந்தன் தனயரே

குலசேகரிக்கும் குழந்தைகளுக்கும் தர்க்கம்.

அம்மாயிங்கு யென்ற வர்ணமெட்டு.

அருகன்தணல்வீசுதே அம்மா யெந்தன் அம்மா
அயனிட்ட விதியாகும்

குலசேகரி.

ஒருகரத்தாலேயான் ஓங்கிகுடைபிடித்து
அருகன்சுடர்தாங்காமல் அழைத்துச்செல்வேனடா
வருத்தப்படாதீர் அப்பாநீங்களிப்போ

குழந்தைகள்.

வெய்யவன்சுடரால் வெந்தோம் யாமும்நொந்தோம்
மெய்யில்கொப்பளிக்க மிகவும்மனத்துயரால்
வையகத்திலின்று வருத்தமுறலானோம்

குலசேகரி.

வெய்யலுறைக்குதென்று விரலால் குடைபிடிப்பேன்
மெய்வருந்தப்பெற்ற மேன்மையென்மைந்தரே (வரு)

வசனம்.

சோகமின்றி வருவீர்.

குலசேகரி தரு.

கன்னல்மொழி பாங்கியரே யென்ற வர்னமெட்டு.

எண்ணற வாசித்தாலும் எழுத்தறக்கற்றுலென்ன
பெண்புத்திபேதமையால் பெருமோசம்போனேனையோ
அண்ணன்வீடென்றுநம்பி ஆவலுடன்வரவும்
புண்படச்செய்தாள்பாவி புருஷன்சொல்மீரிவந்தேன்
எங்கேனும்கிணரிருந்தால் வழுபிள்ளைகளும்நானும்
சங்கரன்சாக்ஷியாக சாகுவோமதிவிறங்கி
இந்தகோலத்துடன்என் மன்னவரிடஞ்சென்றால்
நிந்தனைகள்பேசிடுவார் நீதியல்ல அங்குசெல்ல

குலசேகரி வசனம்.

தலைவிதியே எப்போதும்பெண்ணாகப்பிறந்தவற்கு பின்மதியே யன்று முன்புத்தி கிடையாது. ஆதியில் என்பிராணநாதர் உரைத்த போதேயான்நாட்டில் தங்காமல் அவரை திரஸ்கரித்து வந்ததாலல்ல வோ இக்கொடுந்துயரம் ஏற்பட்டது. ஆ தெய்வமே இச்சேதி மன்னவரறிந்திடில் நிந்தனைசெய்து என்னை கட்டாயம் பிராணத்யாகஞ் செய்துவிடுவார் சொக்கேசா இதற்கெப்படி உய்வேன்.

பொது வசனம்.

இடையர் பசுக்கூட்டங்களை மேய்த்திருக்கக்கண்ட குலசேகரி அவர்களிடஞ் சொல்லுங் கவி.

இடையர் பிராப்தம்.

தரு இராகம் பார்சி-அடதாளசாப்பு.

தாஜராஜ தாஜராஜ அ ஸராஜஹோ முஜே.
சுஞோஹோவே மூபார குதும்கு பரியே தக்துதாஜஹோ
ஸாஹதுதில்சே துாகசாரி கை ரஜின் சகியப்
ஹிமரது ஜல்ரஷ் பியுஷா துவோ ஷரதீகரலோத
ஸரவா அபசர பேதர குஷ்தர
கௌஹர அப்சா பேதா குஷ்தர
அமஜினசேரமே ரஹோட்சாதுமா
சுகமே கரோன்துக்
சிகமே கரோன்துக்
சுகமே கரோன்துக் துக்

181029

குலசேகரி கவி.

ஆடுமாடுகளைமேய்க்கும் அன்புள்ளதம்பிமாரே
தேடுகிறேன்பாழ்கிணற்றை தெரிந்திருந்தால்சொல்லுவீரே.

குலசேகரி வசனம்.

பசுக்கூட்டங்களை மேய்க்கும் யாதவகுலதிலகரே இந்த எவ்கேணும் ஓர் கிணறிருந்தால் காண்பியுங்கள்

இடையர் வசனம்.

அம்மணி நீயாரோ அறியோம் உன்னையும் இக்குழந்தைகளை யும் கவனித்திடில் மிகவும்மனவாட்டம் அடைந்தவர்போல் தோனு கிறது நீ பாழ்கிணறு கேட்பதினல் எமக்கு சந்தேகமாகவிருக்கின் றது தாயே.

குலசேகரி விருத்தம்.

சந்தேகம்நினைக்கவேண்டாம் சாற்றுவேன்கேளீரப்பா
மைந்தரோபசிதாளாமல் மண்மீதுசோறுகின்றார்
எந்தன்பால்சட்டுசாதம் யிருப்பதால்தண்ணீர்வேண்டும்
இந்தமாகாணிற்கேணி எங்கேனுமுளதோசொல்வீர்.

வசனம்.

ஐயா நீங்கள் இதனைக்குறித்து சந்தேகப்படாதீர் என்னிட மைந்தர்களின் பசிதீர்க்க அமுதளிக்கப்போகிறேன் அதற்கு ஜலம் வேண்டியதாகையால் கிணற்றைநான் கேட்கின்றேன் எங்கிருக்கின் றதோ காண்பிப்பீரையா.

இடையர் வசனம்.

அம்மா இதோ மார்க்கமாய்ச்சென்றால் எதிரில்கிணறுதெரியும் ஆனல் ஜாக்கிரதையாய்ச் செல்லுமம்மா.

குலசேகரி வசனம்.

இடையர் உரைத்த கேணி யிதுதான்போல் காணுகின்றது ஐயோ தெய்வமே.

கிணற்றுசீன்.

பொது வசனம்.

குலசேகரி தரையில் மூர்ச்சித்து விழுதல்.

குலசேகரி கேணியைக்கண்டு துக்கித்தல்.

இராகம்-ஆகிரி தாளம்-ரூபகம்.

இழவுகிணற்றில் வீழ்ந்து இறக்கவந்தோமடா
அழவேண்டாங்கடவுளை தொழுமுபல்வீர்
வலதுசிரிப்பார்கள் வாயுள்ளோரேசுவார்கள்
குலஹீனமாகுமே நலமல்லவே

சம்பத்திழந்தபின்னர் சடத்தோடிருக்கலாமோ
உம்பர்பதிசேர்வோம் சம்பிரமுடன்
தாய்சொற்றடுக்கலாமோ தரணியாள்வேந்தரின்
சேய்நீங்களல்லவோ தாய்நானன்றோ.

குலசேகரி வசனம்.

வாழ்காலஞ்சென்று தாழ்வுவந்தபோது இத்தாணியி லிருப்ப தைவிட இறப்பதே நலமாதலால் முன்பாக என்மக்களை கேணியில் தள்ளிவிட்டு பிறகு நாம் மாள்வதே நலம்.

பொது வசனம்.

குலசேகரி ஆறுமைந்தரையும் கிணற்றில் தள்ளிவிட்டு மூத்த குமாரனான ஞானசேகரனை கேணியில்தள்ள அழைக்கும்போது அன்னவன் தடுத்துரைப்பது.

குலசேகரி ஆறுபேரையும்
கிணற்றில் தள்ளிவிடுதல்.

குலசேகரிக்கும் ஞானசேகரனுக்கும் தர்க்கம்.

தஞ்சரி ஆதி.

கண்மணியே உன்னை யென்ற மெட்டு.

குலசேகரி.

வாடாகண்மணியே வரமணியே யிந்தவாவியில் ஆவிவிட

ஞானசேகரன்.

ஆடாமொழிகளை ஆடுகின்றீரே அம்மணி நீருமின்று

குலசேகரி.

கடவுளைதொழுதுகங்கையில்விழுவாய் கைலையைநாடிச்செல்வோம்

ஞானசேகரன்.

கேணியில்விழுந்துஉயிர்போக்கிக்கொள்ள கலங்குதேஎந்தநெஞ்சம்

குலசேகரி.

மக்கள்ஆறுபேரை மாளச்செய்தபின் மண்மீதிருக்கலாமோ

ஞானசேகரன்.

ஏகபுத்திரன்யிருந்துமக்கல்லவோ கர்மங்கள்செய்திடுவேன்

குலசேகரி வசனம்.

குழந்தாய் உலகில் கொடிதான வருமை வாய்ந்தபோது இப்பிராணன் வைத்திருக்கக்கூடாது. பிறர்கண்டு நகைக்காரோ என்று நீயிதை உணர்ந்தும் அறியாதவன்போல் இப்படி முரட்டுத்தனம் செய்கின்றாய்.

ஞானசேகரன் வசனம்.

அம்மா ஆறு தம்பிமாரும்மடிந்தனர் யான் ஒருவனாவது உயிரோடிருந்து ஆடுமாடுகளை மேய்த்து ஜீவித்து என் சகோதரர்கட்கும் உமக்கும் எள்ளுந்தண்ணீர் இறைத்து நமது குலம் விளங்கச் செய்ய மாட்டேனா அதையுன்னி என்னைமாத்திரம் பிராணத்துடன் விட்டு விடுவீர் தாயே.

குலசேகரி விருத்தம்.

பிறந்ததுமண்மீது பிரவிகள்ஒவ்வொன்றுக்கும்
மரணமென்பதுநம்மை மரவியும்விடமாட்டார்கள்
இறப்பதற்கஞ்சுகின்றாய் என்னருந்மக்களே தாய்சொல்
தடுப்பதுதர்மமல்ல துணிவாய்நாம் கிணற்றில் வீழ்வோம்

குலசேகரி வசனம்.

அடே அன்னைசொற்றடுப்பது தர்மமா.

ஞானசேகரன் வசனம்.

ஆனாலுமனு சித்தம்போல் செய்வீர் அம்மா.

பொது வசனம்.

ஞானசேகரனும் மடிந்தபின் குலசேகரி மூர்ச்சித்து பூமியில் வீழ்ந்து பாடுதல்.

ஞானசேகரனையும்கேணியில் தள்ளிவிட்டு துக்கித்தல்.

குலசேகரி தரு சோகம்.

என்மக்களை பரிகொடுத்தேன்
மாபாவியான்மலடிபோல் தவித்துநின்றேன் (என்மக்)

இக்கதிக்காகவே யிங்குநான்வந்தது
ஈசா ஜெகதீசா என்னையாளும் சர்வேசா (என்மக்)

மாங்கல்யத்தைக்கழட்டி மாவிலையில் வைத்தேன்
மானிலத்தோரிதனை மகிமையரியத்தாலி (என்மக்)

ஓங்கிவளரவேண்டும் ஒருக்கல்லாகவேண்டும்
தாங்கொணாத்துயரால் தாய்வீடுவந்ததனால் (என்மக்)

வசனம்.

என் மைந்தரையும் பரிகொடுத்து அநாதியைப்போல் தனிமையாகினேன். மேலும் என்மாங்கல்யமும் பாலாடையும் இப்பட்டாடைமீது வைத்து கேணிக்கரையில் வைத்தேன் இதனால் நமது பெயர் விருத்தியடையவேண்டும். இட்சணமே யானும் பிராணத்தியாகம் செய்துக்கொள்ளுகிறேன்.

பொது வசனம்.

குலசேகரியும் மடிந்தவுடன் வேட்டைக்குச்சென்ற நற்றம்பி வேட்டைமுடிந்துவரும்மார்க்கத்தில் துற்சகுணம்கண்டுவிசனித்தல்.

தி. முருகேச நாயகர்—நல்லதம்பி.

18/079

நல்லதம்பி வசனம்.

அடர்ந்த ஆரண்யம் யாம் வேட்டையாடி வரும்பொழுதுஎனக்கு இன்று,

D-7892 M

தரு பிலஹரி ரூபகம்.

அவசகுணங்காணுதேயின்று ஐயோயென்செய்குவேன்
கவலையுமீறுது கண்களுமலறுது

அங்கமும்பதறுது ஆவியும்சோருது
அவனிதனிலெனக்கு அருந்துயராகுது (அவசகு)
வேட்டைமுடித்துவர விட்டைக்கருதியே
பாட்டைதொட்டுயிந்த காட்டகந்தன்னில்வந்து
வாட்டங்கொண்டேனிந்த கெட்டகுறிகளால்
தாட்டிகன்தையலுக்கு நாட்டமேதேனுமுண்டோ (அவசகு)
குலசேகரிதங்கைக் கேதேனும்நேர்ந்ததோ
துலங்குகாசிபதிக்கு துயர்தானுற்றதோ
பலருங்கொண்டாடுமென் பட்டணம்பாழாச்சோ
இலகுமிச்சகுனத்தால் இம்சையேதேனுமுண்டோ (அவசகு)

வசனம்.

இப்போதெனக்கு ஏற்படுந் துற்சகுனங்களால் எவ்வித தீங்குகள்தான் ஏற்பட்டிருக்கிறதோ அல்லது இனிமேல் ஏதாவது விபத்து விளையுமோ எதற்கும் சாக்ஷாத் கைலைவாசனே காக்கக்கடவது யாமென்ன செய்வது இனி தாமதிக்காது நகரத்தை நாடிச் செல்லலாம்.

பொது வசனம்.

நல்லண்ணன் அந்தப்புரத்திற்கு வரும்போதே மாடவ்வயனுல் நடந்த விஷயங்கள் அறிந்து விபாகூலத்தோடு விசாரித்தல்.

மனமோகன அரங்கசாமி நாயுடு—மூளியலங்காரி.

மூளி நல்லண்ணனை அமரச்செய்து சொல் கவி.

கானகம்வேட்டையாடி களைத்திங்குவந்தமர்ந்தீர்
பானகம்நீர்மோர்தன்னை பிரீதியாய்கொள்ளுவீரே.

வசனம்.

தம்முடைய திரேகசிரமத்திற்குப் பானக்கம் நீர்மோர் இதை யுட்கொள்ளுவீர் அமருவீர்.

மூளி உபசரித்தவுடன் நல்லண்ணன் சொல்

விருத்தம்.

உந்தனைப்போலெனக்கு உபசாரஞ்செய்வோர்யாவர்
சிந்தைமிகமகிழ்ந்தேனின்று சிறுமியேசொல்லக்கேளாய்
எந்தனின்தங்கையுந்தன் மைந்தருந்தானுமிங்கு
வந்ததாய்கேள்விப்பட்டேன் வனிதையேயெங்கேசொல்வாய்.

நல்லதம்பிக்கும் மூளிக்கும் தர்க்கம்.

மஞ்சத்தில் வெகுராஞ்சிப்பா யென்ற வர்னமெட்டு.

எந்தன்தங்கைவந்தனளே எங்குசென்றாள்கண்மணி
சிந்தைமகிழ்வாய்புகல்வாய் சித்திரமே னீ னீ னீ

மூளி அலங்காரி தரு.

பண்ணுமெந்தன்நாத்தியிங்கு பாசமாய்வந்தவுடன்
சிந்தைமிகவுங்குளிர செய்தனுப்பினேன்கோதை

நல்லதம்பி தரு.

உந்தன்கொடுமையால் சிந்தைமெலிந்து
மைந்தருடனே அவள் யெங்குசென்றாளோ

மூளி அலங்காரி தரு.

பாழுங்காத்தினுல் பரிமாறினேன் அன்னம்
தாழ்வுவந்துற்றதே தையலுக்கின்றுமே

நல்லதம்பி தரு.

இந்தவுபசரித்தால் யேன்போமுளென்தங்கை
உத்தமியைப்போலயென்முன் உளருகிறாய்நீயிங்கே

நல்லதம்பி வசனம்.

அடி கண்மணி என்தங்கையும் மைந்தர்களும் இங்குவந்தால் காண காதல்கொண்டிருக்கும்போது ஏதேதோ உளருகின்றனையே.

மூளி அலங்காரி வசனம்.

பிராணபதி ஏதுவும் 'வேறுவிசேஷம் உரைக்கவில்லை உமது தங்கையின் வார்த்தைகள் தான் இன்னமும் தெரிவிக்கின்றேன் கேளும்.

மூளியலங்காரி தரு பாக்பனுயே என்ற வர்னமெட்டு.

எந்தனத்துரையே உந்தனத்தங்கை
வந்தனள்வழு லமைந்தருடன்
சிந்தைகொண்டெதிர் சென்றுனழைத்து
சொந்தமாய் ஆதரித்தேன்
சின்னசம்பாயது அன்னம்நான்சமைத்தேன்
பன்னும்பலகார வகையும்வைத்தேன்
புன்னகையுங்கொண்டு நன்னயமுடனே
பூவையாள் விருந்தளித்தேன்
நாட்டமாயுன்தங்கை கேட்டபொருளனைத்தையுமன
வாட்டமில்லாமலே யான்கொடுத்தேன்
வீட்டைவிட்டு மைந்தரும்தானும்
வெளிசென்றதை யறியேன்

மூளி அலங்காரி வசனம்.

பிரியகாதலரே உமதுதங்கையும் ஏழுமைந்தரும் இங்குவந்தவுடன் நான் எதிர்சென்று உபசரித்தழைத்துவந்த அவர்கள் எப்படி விரும்புகின்றனரோ அதுபோல் போஜனமளித்து அவர்கள் இச்சித்த ஒவ்வொருபொருளையும் மனவாட்டமின்றி யான்கொடுத்தும் அவர்களுடைய அற்ப எண்ணத்தைவிடாமல் அப்பொருள்களையுமெடுத்துக்கொண்டு என்னிடமுஞ்சொல்லாமல் எங்கேயோ சென்றுவிட்டார் பிறகு யான் எங்கெங்குதேடியும் அகப்படவில்லை அதனாலேயே எனக்கு விசேஷ விசனம் ஏற்பட்டது யான் என்னசெய்து என்ன பிரயோசனமாச்சுது.

நல்லதம்பி வசனம்.

அடி சகி!

நல்லதம்பி தரு.

இத்தனைஉபசாரங்கள் இனியதாய்நீசெய்திருந்தால்
இதைவிட்டுயேன்போவாள் என்னருந்தங்கை
இதைவிட்டு யேன்போவாள்
சத்தியவதிபோல சாதிக்குறாயடி
சண்டாளிநீயின்று சற்றேனுமஞ்சாமலே (இத்த)
உத்தமியென்தங்கைக்கு வஞ்சனைநீபுரிந்திட
கத்தபமேபோடி சீச்சீ கத்தபமேபோடி
பொல்லாங்குசெய்தாயே என்னிடம்நீ
வில்லங்க மொழிந்தாயே (இத்த)
அற்பமாகயெண்ணி அனியாயஞ்செய்ததால்
சொல்லாமலொருவரிடம் சகோதரியுந்தனயரும்
செல்வருடனேயெங்கு சென்றாளோ அறிகிலேன்
அனியாயக்காரிபோடி சீச்சீ
அனியாயக்காரிபோடி அடி (இத்த)

நல்லதம்பி வசனம்.

அடிபாதகி நீ அவர்கட்கு இவ்வளவு உபசாரணைகள் செய்திருந்தால் அவர்களேன்இதைவிட்டு செல்லப்போகின்றார் சத்யவதிபோல் அசத்தியவார்த்தைகளை சாதிக்கின்றாயே சண்டாளி உன்முகாலோபஞ் செய்யப்படாது இப்போதே யான் சென்று என்தங்கையைக் கண்டு அழைத்துவந்துதான் ஜலபானஞ்செய்வேன் அடிபாதகி ஆதியில் என்தந்தை உனக்குவுரைத்த வார்த்தைகளையும் மறந்தனைபோலும் அவளுக்கில்லா சொந்தம் உனக்கிங்கு என்னடியிருக்கிறது சீ பிரஷ்டி அகன்றுசெல் யான்செல்லுகின்றேன்.

பொது வசனம்.

நல்லண்ணன் தெருவில்வந்து தங்கையைத்தேடுதல் யாவரையும் விசாரிக்குதல்.

நகர்வீதி சீன்.

அண்டைவீட்டு மாதர் பிரசங்கம்.

கொய்ரபக்மரா ஜீகயாஜானே
னியாமதுலபு அபாஜுஜானே

புண்படச்செய்தாள் மூளியும்

மீஸ்வரப்ரீதி ஐ ஓ ஜானே
மௌலாலிகே மௌஜானே
ஆதம்கு ஆகம் ஆஜானே இஸ்
தூரக தூரஸ மாஜானே
அரே ராயிந்தர் ஸோஜர்னே
அரே மௌலாலீகே மௌஜானே

நல்லதம்பி தரு இயன்லேயாதகே என்ற மெட்டு.

அண்ணன்விட்டு ஆச்சிமாரே
அருமைதங்கையைக் கண்டீரோ
பூவையும்நொந்துச் சென்றனள்
அண்ணன்யான்பார்க்க ஆவல்கொண்டேன்
கண்டிடாவிடில் எதுவும்தீண்டேன்
எண்டிசைதனில் எவரும்வேண்டேன்
விண்டிருந்தால் சொல்வீர்கேட்டேன்

நல்லதம்பி வசனம்.

அம்மணி என்னருமைதங்கையிங்குவர தாங்கள் கண்டதுண்டா அவளையான் காணாவிடில் இந்தவுலகில் எந்தசுகமும் விரும்பேன் பார்த்திருந்தால் சொலவீரம்மா.

அண்டைவீட்டுமாதர் வசனம்.

பிரபு தம் தங்கை எழுபுத்திரருடன் இங்குவந்து கிஞ்சித்து நாழிகைசென்று வெளியில்வந்தபோது முகாரவிந்தம் மிகவும்வாட்டமடைந்திருந்ததைக் குறித்து யாங்கள் எம்மால் கூடியவரைக்கும் அமுதளிக்க அழைத்தோம் அவர்கள்வரமாட்டேனென்று உரைத்துவிட்டு இங்கு நடந்த தீச்செயல்களை மாத்திரம் உம்மிடம் உரைக்கும்படி சொல்லி சென்றுவிட்டார்கள்.

நல்லதம்பி தரு இராகம் தேசிகதோடி அடதாளம்.

எங்குதான்சென்றனளோ எந்தன்தங்கையவளும் (எங்)
எங்கென்றுயான்தேடுவேன் எவ்வதிசைபகாடுவேன்
இங்குஎன்னருந்தங்கையின் மக்கள் தங்கிடாமலே (எங்)
சண்டாளிமூளியென்ன சதிசர்ப்பனைசெய்தாளோ
எண்டிசைதனில் பெண்டிவளைபம்பால்காண்கிலேனுமினை (எங்)

இடையர் பிரவேசம்.

பார்ஷி கீதம்.

ஹைஜெகதா கிலதா
  நிலதா கிலதா
  ஹொய்யுக் பியாரக் பியார்
ஹைசபான் ஹைக்ருபான் பத்தாஜான் ஹை ஜெகதா
  நிக்கமில்லா பியாரா ஜீக்ஸேஹை ஜோண்யாரா
  சிர்வாஹை பன்வாயா
  குன்சேனே கில்யாயா ஹொயுன் சுபார்
பக்காகே சாஜேசே ஹாஜேமிலாதியா
  கம்மேபதாா தாயா
  இதா உதா திதா சிதா
  சானிமியே திஸ்கே ரக்தினிகார் ஹைஜெகதா

பொது வசனம்.

என நடந்த விசேஷத்தை புகலக்கேட்ட நல்லண்ணன் விசனிக்கும் தரு.

இடையரை நல்லதம்பி கேட்கும் தரு.

இங்குமாடுமேய்க்கும் மைந்தரேநீங்கள்
என்னரும்பிரவியைக் கண்டீரோ
தங்கையும் யேழுமக்களுமிந்த
தனிவழியாய்வரக் கண்டீரா
சங்கையின்றி சந்தோஷமாய்
சாற்றுநீர்நீங்கள் விசிதமாய்
எங்குசென்றுளோ அறிகிலேன்
ஏதும்பாறுந் தெரிகிலேன் (இங்கு)

இடையர் வசனம்.

பிரபு உமது தங்கை யேழுமைந்தருடன் இவ்விடம்வந்து பாழ் கிணற்றைக் காண்பிக்கும்படி எம்மைக்கேட்டனர். அவர்கள் முக மெலிந்து மனவிசாரத்துடன் இவ்விடம்வந்து பாழ்கிணற்றைக் காண்பிக்கும்படி கேட்டதைப்பற்றி நாங்கள் சந்தேகித்து அம்மணி தாங்கள் கிணற்றைநாடிவந்த காரணமென்ன வென்றுகேட்க அதற்

கவர்கள் மைந்தர்கள் பசியாயிருப்பதால் கட்டுசாதம் சாப்பிட ஜலம் வேண்டுமென தெரிவித்தனர் இவ்வழியாகச்சென்றால் கொஞ்சதூரத்தில் ஓர் கிணரிருக்கிறதென்று சொல்லியனுப்பினோம்.

வசனம்.

ஐயோ இந்த யிடையர்களும் பாழ்கிணற்றை காட்டினதாகத் தெரிவிக்கின்றார் மேலும் இம்மார்க்கத்தில் அடையாளமாக ஆவாரந்தழைகளையொடித்து போட்டிருக்கின்றது ஆதலால் இவ்வடையாளத்தைக்கொண்டே செல்லலாம்.

பொது வசனம்.

நல்லண்ணன் கிணற்றில்மீதில் மாங்கல்பமும் பாவாடையும் பார்த்து சோகமுறுதல்.

நல்லண்ணன் வசனம்.

அருந்தங்கையே இக்கேணிக்கரையில் உன் மாங்கல்யமும் உன் மைந்தகளுடைய பாவாடையும் வைத்து எங்கு சென்றனையோ தெரியவில்லையே.

நல்லதம்பி பட்டாடையைக்கண்டு விசனித்தல்.

தரு அனுதியானேன் என்ற வர்னமெட்டு.

தங்கையேநீயும் தரணிதன்னில்
தயங்கிடவைத்தாய் தமயன்யெந்தனை (தங்)
இங்கேணேவந்தாய் இவ்விதமான
வங்கவுமானேன் என்னருமபிறவி (தங்)
பட்டாடைமீதில் பாவாடைவைத்தே
வாட்டமுற வனிதையேசெய்தாய் (தங்)

வசனம்.

தங்கா குலசேகரி இனி உன்னை எங்கு காணப்போகின்றேன் என்னரும் சகோதரி.

பொது வசனம்.

கிணற்றில் எட்டிப்பார்த்து பிணங்களைக்கண்டு மூர்ச்சித்து விழுந்தவுடன் சொல்லுதல்.

நல்லதம்பி கிணற்றில் சவத்தைக்கண்டு சிந்தித்தல்.

நல்லதம்பி தரு.

அறுபதுமுழங்கூந்தல் அலையுதேதண்ணீரில்
ஐயோநானென்னசெய்வேன் தங்கா அருமைதங்கா
அண்ணன்வீட்டைக்கருதி ஆவலுடன்வந்துநீ
புண்படச்செய்யலாமோ தங்கா அருமைதங்கா
பட்டாடைமீதினில் பாலாடையும்வைத்தே
வாட்டங்கொள்ளச்செய்தாயே தங்கா அருமைதங்கா
எப்போதுந்தனைக்காண்பேன் என்னரும்பிரமியே
தப்பானகாரியஞ்செய்தாய் தங்கா அருமைதங்கா

நல்லதம்பி வசனம்.

நாமிப்படி துயரப்பட்டால் லாபமென்ன இப்பிரேதங்களையாவது எடுத்து முகத்தையாவது பார்க்கலாம்.

கிணறு சீன்.

பொது வசனம்.

நல்லண்ணன் கிணற்றிலிரங்கி பிரேதங்களை யெடுத்துவைத்து சோகிப்பது.

நல்லதம்பி பிரேதத்தையெடுத்து சிந்தித்தல்.

தரு மாமி என்செய்வேன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தங்காயென்செய்வேன் இத்தரணியில்
நான் துயர் கொள்ளலானேன் (தங்)

அநுபல்லவி.

அங்கமும்பதறுது ஆவியுஞ்சோருது
அவனிதன்னில்மிக சஞ்சலமீருது (தங்)

சரணம்.

வாழைகுருத்துபோல என்தங்கையே
வத்சருடனே மாள
மூளிசெய்தவஞ்ச மூர்க்கத்தினால்யும்
மைந்தருடனேயின்று மாய்த்தாய்உயிர்தனை
மாய்த்தாய் உயிர்தனை (தங்)

வசனம்.

அம்மா குலசேகரி நீ உன் மைந்தர்களுடன் இங்குவந்து இப்படிமாண்டு எனக்கு பெரும்பழியை தேடிவைத்தது நியாயமா.

நல்லதம்பி காஷ்டங்களை அடுக்கி தீமூட்டல்.

தரு பஞ்சபாதகி என்ற வர்ணமெட்டு.

ஐயோநானென்செய்வேன் என்தங்கையே
அவனிலெப்படிவுய்வேன் அருந்தங்கையே
வையகந்தனிலெனக்கு என்தங்கையே
வாய்த்தாய்அருமையாக யென்தங்கையே.

கலித்துறை.

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன ஒன்றுவதில்லை
தொழுதாற்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதாற்பயனென்ன நன்மையுந்தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோ சலியாதீரென் யேழைநெஞ்சே.

வசனம்.

நாம் பேதமை மாதைப்போல் புலம்புவதினால் யாதுபிரயோசனம் யாம் பிரலாபித்தாலும் யீசன் லலாடத்தில் எழுதியவாரே முடியும் ஆகையால் விசனத்தைவிட்டு தங்கையை தகனஞ்செய்ய எத்தனிக்கவேண்டும்.

பொது வசனம்.

பணதிடங்கொண்டு கட்டைமுட்டைகளைசித்தப்படுத்தி காஷ்டமடுக்கி தியிடுதல்.

நல்லதம்பி தரு கெடி வர்னமெட்டு.

சந்தனகட்டைகளை என்தங்கையே உனக்கு
சதிராகசேர்த்துவைப்பேன என்தங்கையே
குங்குமகட்டைகளை என்தங்கையே நான்
இங்கடுக்கிவைத்தேன் என்தங்கையே
காஷ்டமடுக்குறேன் என்தங்கையே
இஷ்டமுடனுனக்கு என்தங்கையே
தங்கைக்குமக்களுக்கும் என்தங்கையேநான்
தியைவைப்பேனின்று என்தங்கையே

தீபற்றி எரியுதல்.

நல்லதம்பி வசனம்.

நற்றங்கையே இத்தீயால் நீ மாத்திரம் பஸ்பமாகாமலிருக்க காரணம் யாது அம்மா.

குலசேகரிக்கு தீபிடிக்காததினால் தம்பி சிந்தித்தல்.

விருத்தம்.

தங்கையேநீயுமிந்த தரணியிலெந்தநாளும்
பங்கமின்றென்னைபாது காத்திடவேண்டுமானல்
இங்குநான்வைத்திட்ட இத்தீயால்நீயுமின்று
சங்கையின்றிக்ஷணமதில் சாம்பலாய்ஜொலிப்பாயம்மா.

பொது வசனம்.

நல்லதம்பி தனியாய் வீட்டிற்குவந்து சோகத்துடனிருக்கும் போது மூளி அங்குற்று தன்மைந்தனுக்கு விவாகம் செய்யும்படி கேட்குதல்.

(மூளி வ-ம்.) பிராணபதி என் மனவாட்டத்துடனிருக்கிறீர்.

(நல் வ-ம்.) யாதொரு மனவாட்டமும் இல்லை கண்மணி.

(மூளி வ-ம்.) துரையே நம்மைந்தனுக்கு விவாகஞ்செய்ய ஆலோசனைசெய்யாமல் மௌனமாயிருக்கின்றீரே.

(நல் வ-ம்.) எனக்கும் அவனுக்கு விவாகமுடிக்க யிஷ்டந்தான் ஆனல் தடைகிடையாது சமஸ்தமும் சேகரப்படுத்துகிறேன் நீ அந்தப்புரத்திலுள்ள காரியங்களை சென்று கவனிப்பாய்.

(மூளி வசனம்.) அப்படியே.

(பொது வ-ம்.) நல்லண்ணன் சிற்பியை அழைத்து சூத்திரப் பந்தல் ஏற்படுத்தும்படி கற்பித்தனுப்புதல் விவாகம் முடித்து யாவரும் சூத்திரப்பந்தலுக்குள் சிலரும் வெளிபுரம் சிலரும் அமர்ந்து புசித்திருக்கும்போது மண்டபம் விழுதல் மூளியின் பந்துக்கள் மாண்டுவிடுதல்.

மூளி வசனம்.

ஐயையோ மன்னவா என்னகாரியம் செய்தீர் இது எதுரூஅ இப்படியும் செய்யலாமா.

கல்பனு சம்மு வர்ணமெட்டு.

சீபோடி நிர்மூடி குடிகேடி பழித்தேடி வைத்தவளே
ஆடிபாடி எந்தன்முன்னே
அபிநயிக்கும் அல்பனுரி
வாடியுந்தனை வதைத்துபின்று
படாதபாடுகள் செய்வேன் (சீ போடி)

மூதேவிமூளியை மொட்டையடித்து
முகத்தில்கருப்பு சிகப்பும்வைத்து
காதகியைகர்த்த பத்தின்மீதிலேத்றி
கண்டோர் நகைக்கும்படி
கடிகினில் செய்வேன் (சீ போடி)

பொது வசனம்.

நல்லண்ணன் மூளியைக் கரும்புள்ளி செம்புள்ளிகுத்தி மொட்டையடித்து கர்த்தபத்தின்மீதிலேற்றி மானபங்கம் செய்துவிட்டு தனித்திருக்கும்போது காசியில் பஞ்சம்துலைய அரசன் புனரபி தர்பாரில்தோன்றி மந்திரியிடம் சொல்லுதல்.

காசி தர்பார்.

ஆர். கோவிந்தசாமி நாயுடு—காசிராஜன்.

தரு இராகம் - பார்ஸி, தாளம் - ஆதி.

மொ ஸஜநகி கைகரே
மெரிஜான் கைநமான்

தாஸ தரஸ்கர பதிய பனுயி
ஐஸ்ே கைமேரா தில் பரஸே
ஜான் ஜான் ஜாறனே மோரிபிஜான்
நைநா முத்து வாலே தேகோ
தியாமோரோ டோரா தோரா

இர்ாகம் - பூர்வகல்யாணி, தாளம் - ரூபகம்.

பஞ்சம் தீலந்து பிரசித்தமாச்சுது
மந்திரி எந்தன் ராஜ்ஜியம் (பஞ்)
நஞ்சைபூமியும் நன்மையாய்பலித்ததால்
நானுமிகமனமகிழ்ந்தேன் நீலகண்டனேயும்பணிந்தேன் (பஞ்)
வேதியர்தமக்கு வேண்டிர்பொருள்களை
வேகமதாகவே யளிப்பீர்
என்றும்நீதிதப்பாம ஹெகியாய்த்திரியும்
அன்பரையும் ஆதரிப்பீர்
சாதிமுறைப்படி சர்வஜனங்களுக்கு
சந்தோஷமாக யின்று
யீர்துவாரும் பொருளாநன்று (பஞ்)
பலரும்புகழுமென்பத்தினி புத்திரர்களை
பாசமாய் யானும்கண்டு
இலகும்எந்தன்மைத்துனர் இளவஞ்சிதங்கை
அலங்காரியையுங் கொண்டு
கோலாகலத்துடன் கொணர்ந்துயிங்கனம்

கோரும்விதம் நடக்கச்செய்வேன்
கொற்றவர்களும் பணியவைப்பேன் (பஞ்)

வ-ம். அமாத்தியசூடாமணி தற்காலம் யான் உரைத்தவாறு சமஸ்தகாரியங்களும் செய்யகடவீர் யான் அதிதுரிதமாக மதுரை பதிக்கேகி என்பிரியபத்தினி புத்திரர்களை அழைத்துவருகிறேன் வருகிறபரியந்தம் பட்டணத்தை பத்திரமாய்ப் பாதுகார்க்கும்படி கனிஷ்டமந்திரிக் குத்தரவளித்து தாங்கள் என்னுடன் வரக்கடவீர்.

மந்திரி வசனம்.

சித்தம் அப்படியே செய்குறேன் வேந்தே.

ரோட் சீன்.

பொது வசனம்.

அரசன் வரும்மார்க்கத்தில் துற்சகுனங்களைக்கண்டு மந்திரியிடம் கூற மந்திரி அதற்குத்தகுந்த தேறுதலை கூறல்.

மதுரை வசந்தம் மாடி சீன்.

பொது வசனம்.

அரசன் அந்தப்புரத்தில் குலசேகரியையும் மைந்தரையும் பலதரம் தேடியும் காணாதகால் நல்லதம்பியைக் கேட்குதல்.

காசிராஜன் வசனம்.

குலசேகரி! ஆ! ஞானசேகரா! ஞானசேகரா!! குலசேகரி! ஞானசேகரா! அந்தபுரத்திலுங் காணோமே எந்தன் தங்கையாகிய மூளி அலங்காரியுங் காணோமே பள்ளியரையிலுங் காணோம் எங்குதான் சென்றனர்களோ யான் என்செய்குவேன் ஜெகதீசா! ஆயினும் மைத்துனரையாகிலும் கேட்டு தெரிந்துக்கொள்வோம். மைத்துனரே வன் முகவாட்டத்துட னிருக்கின்றீர் வாய்திறந்து பேசக் கூடாதா உமது ராச்சியம் பாழாய்கிடக்கின்றதே.

காசிராஜனுக்கும் நல்லதம்பிக்கும் தர்க்கம்.

'ஐபரியாத என்ற வர்ணமெட்டு.

காசி மைத்துனரேயிங்குஎந்தன் மனைவியைக்காணேனெங்கே
நல் மைத்துனரேவுன்மனைவி மாண்டுவெகுகாலமாச்சு
காசி பரிகாசம்செய்கின்றீரோ பார்வேந்தேநீருமின்று
நல் உரியதைஉரைத்தேன்யான் உண்மையாகநம்புநீரே
காசி மனைவிதான்மடிந்தனள் மைந்தரேழ்வருமெங்கேயோ
நல் தனபெரும்தாயுடனே தானுமேமடிந்தாரையோ
காசி குலசேகரியும்தன் குழந்தையுடன் ஏன்மடிந்தாள்

நல் நீர்மூளிசெய்தசதியால் நத்தங்கையும்உயிரிழந்தாள்
காசி உயிரிழந்தவிடத்தை உண்மையுடனெடுத்தோதுவீர்
நல் வாவியில்வத்சருடன் வனிதையுந்தானிறந்தாள்

காசிபன் வசனம்.

மைத்துனரே யான் எவ்வளவோ ஆவலாக என்பத்தினியையும் புத்திரரையுங்கண்டு ஆனந்தம்கொண்டு உங்களையுங்கூட என் பட்டணத்திற் கழைத்துச்செல்லலாமென வந்த இங்கு ஏககாலத்தில் எட்டுபேரையும் பரிகொடுத்துவிட்டு தனித்துவாட காலம்வாய்ந்ததே.

(நல் வ-ம்.) மைத்துனரே யான் இதற்குக்காரண பூதனென்று மதியாதீர் என்செய்வேன் பழிக்கு ஆளானேன் லோகத்திலுள்ளவர்களும் என்னையே நிந்திக்ககாலமாச்சுது.

(காசி வ-ம்.) மைத்துனரே நான்முகத்தையும்பார்க்க கொடுத்துவைக்க வில்லையே அவர்களை தகனம்செய்து விட்டதையாவது காட்டில் அச்சாம்பலிலாவது புரண்டழுது என்சோகத்தை கிஞ்சித்தாகிலும் தீர்த்துகொள்ளுவேன் ஆகையால் அவ்விடத்தை எனக்குக் காட்டவேண்டும்.

(நல் வ-ம்.) ஆனால் உமதிஷ்டம்போல் வருகின்றேன் வாரும் செல்வோம்.

பொது வசனம்.

காசிமன்னன் நல்லண்ணன் மந்திரி மூவரும் கேணிக்கரைக்கு செல்லுதல்.

மூன்றாவது சீன்.

(காசி வ-ம்.) மைத்துனரே எந்தயிடத்தில் தகித்தது.

(நல் வ-ம்.) இதோ இந்த இடத்தில்தான்.

(காசி வ-ம்.) ஆ! குலசேகரி குழந்தைகளே இப்படியும்என்னை கைசோரவிட்டு மோசம் செய்யலாமோ.

காசிராஜன் தரு.

அடவிதன்னில் கல்பனு என்ற வர்ணமெட்டு.

மங்கையேயுன்னை மண்ணில்பிரிந்து
மயங்கவுமானேன் இப்போ தியங்கவுமானேன்
அங்கமும்பதருது ஆவியுஞ்சோருது
ஆரணங்கையேஇனி என்செய்வேனிங்கையே.

(காசி வ-ம்.) கைலைவாசா இப்படியும் என்னை சோதிக்கலாமா இதுவும் தலைவிதியா என்னரும்பத்தினி புத்திரர்கள் மாண்டபிறகு யான் பிராணத்துடனிருப்பது நிஷ்பலிதம் ஆகையால் யான் இக்கட்கத்தால் என்னுயிரை போக்கிக் கொள்ளுகிறேன்.

பொது வசனம்.

காசிமன்னன் பிராணத்தியாகம் செய்துகொள்ளுதல் இதைக் கண்டு நல்லண்ணனும் மந்திரியும் மடிபுதல் அதை அறிந்த பரமன் ரிஷபவாகனரூடராய் பிராப்தமாகுதல்.

(பரமன் வ-ம்.) என் மகத்துவத்தால் மண்ணிலுதித்த குலசேகரி நல்லதம்பியும் இவர்களைக்குறித்து காசிமன்னன் மந்திரியாவரும் மரணமடைந்த கோரத்தை காணில் மிகபரிதாபமாகின்றது ஆதலால் இவர்களை என்வல்லமையால் ஜீவனத்துடனெழுந்திருக்கச் செய்கிறேன் ஹே! குழந்தைகளே எழுந்திருப்பீர்கள்.

பொது வசனம்.

யாவரும் எழுந்து ஈசனை பணிந்து அன்னவரால் ஆசிர்வாதம் பெற்று சுகமாகவாழ்ந்திருக்குதல். சுபம். சுபம்.

நற்குலசேகரி சரிதை இரண்டாம்பாகம் முற்றிற்று.

பூலோக இரகசியம்

என்னும்

மதிமோசக் களஞ்சியம்.

அனேகர் வேண்டுகோளுக்கிணங்கி வெகு சிரமப் பட்டு தொகுக்கப்பெற்ற "மதிமோசகளஞ்யசிம்" என்னும் புத்தகம் வெளிவந்துவிட்டது. முக்கியமாய் சென்னையிலும், வெளியூர் பிரதேசங்களில் நடக்கும் மோசங்களையும், திருட்டு, உருட்டு, பிரட்டு, ஜாலம், ஏமாற்றுதல் முதலியவைகளையும் வெகு சிரமப்பட்டு சேகரித்து தெற்றன இனிய நடையில் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகம் அவசியம் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டியது. இருப்பின் நாம் நம் நாடுகளில் மோசக்காரர்களால்செய்யப்படும் மோசத்திற்குட்படாமல் வாழலாம். இதில் எவ்விதமோசங்களையும் பேதமில்லாது எழுதியிருப்பதால் இது எல்லோருக்கும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. இதைப்போல் புத்தகம் இதுவரையில் வெளிவந்ததுகிடையாது. அதிசாமார்த்திய மோசங்களான 152 மோசக்கள் சேர்த்தெழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1 0 0

அவுட்டுச் சிரிப்பு.

கனவான்களே அவுட்டுக்கிளப்புவதுபோலத் தொந்திகுலுங்கச்சிரித்து ஆனந்தமாக பொழுதுபோக்க வேண்டுமானால் "திடீர்ப்புளுகன்" கதையை வரவழைத்து வாசியுங்கள் விலை அணா 6.

சிறுத்தொண்டன் சரித்திரம் (டிராமா)

நேயர்களே ! இது பக்கிரசம் ததும்பிய இனிய நாடகம் · டாமசிவனுக்கும் நாரதருக்கும் தர்க்கம், சுவாமியார் சிறுத்தொண்டன் சிறுதொண்டன் தர்க்கம் இன்னும் அனேக தர்க்கங்கள் தில்லானா, டோம்ரி, காவடிச்சிந்து, திருப்புகழ், தொண்டிச்சிந்துபுதிய பார்சிமெட்டு அடங்கியது. பக்திரசம் ததும்பிய நாடகம் இது ஒன்றே இன்றே எழுதுங்கள்.

இதன் விலை அணா 6.

முக்தமால ॥

அல்லது **பிரபஞ்ச விநோதங்கள்.**

விலை ரூபா **2.**

எமது விலாசம்:—

பார்வதி அண்டு கம்பெனி,

34, ஆண்டியப்ப நாய்க்கன் தெரு, சூளை போஸ்டு, மதராஸ்.